This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# கனவுத் தொழிற்சாலை

சுஜாதாவுடன்...
ஒரு டிஸ்கஷன்

சுஜாதாவின் 'கனவுத் தொழிற்சாலை' ஒரு புதுமைத் தொடர்கதை.

இந்தக் கதை முழுக்க முழுக்கப் பட உலகையே பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்டிருக்கிறது. இந்தக் கதையின் முதல் அத்தியாயத்தை நடிகை லட்சுமியிடமும், டைரக்டர் மகேந்திரனிடமும் கொடுத்துப் படிக்கச் சொன்ன பிறகு சுஜாதாவுடன் அவர்கள் விவாதித்தனர். அவர்களோ, கதையைப் பற்றி அல்லாமல் பொதுவாக சினிமா உலகைப் பற்றியும் இங்கே சுவையாக அலசியிருக்கிறார்கள்.

---

நடிகை லட்சுமி : உங்க கதையின் முதல் அத்தியாயத்தைப் படிச்சேன்... ஆரம்பத்திலேயே 'நன்றாகத் தெரிந்தவர்கள், தெரிந்தவர்கள், குறைவாகத் தெரிந்தவர்கள் இவர்களைப் பற்றி இல்லே இந்தக் கதைன்னு ஒரு 'எக்ஸ்கியூஸ்' கேட்டிருக்கீங்களே, அதுக்கு என்ன அர்த்தம்...?

சுஜாதா : தெரிஞ்சவங்களைப் பத்தி எழுதறது ரொம்ப சுலபம். படிக்கறவங்களும் நான் யாரை வச்சி எழுதறேங்கறதைக் கண்டுபிடிச்சுடுவாங்க... என்னுடைய பர்பஸ்' அதில்லே... நான் ஒரு Eternal தமிழ் ஹீரோவைப் பத்திச் சொல்ல விரும்பறேன். உங்களுக்கே சினிமாவைப் பத்தி எவ்வளவோ தெரியும். உங்களோடு பேசும்போது அதைப் புரிஞ்சுண்டு அதையெல்லாம் என் நாவல்லே கொண்டு வர்றதுதான் என் எண்ணம். முதல் அத்தியாயத்திலேயே ஒரு இடத்திலே நான் எழுதியிருக்கேன்.

லட்சுமி (இடைமறித்து) : சீன் நெ.67–ன்னு வருதே...

சுஜாதா : ஆமாம்... என் கதாநாயகனுக்கு அந்த சீன் எவ்வளவு அபத்தமாயிருக்குன்னு தெரியுது. அவனுக்குத் தியானம் பண்ணணும்னு ஆசை இருக்கலாம்... நல்ல புஸ்தகம் படிக்கலாம்னு தோணலாம்... கோடார்டோட ஸ்கிரிப்டைப் படிக்கணும்னு ஆசைப்படலாம். ஆனா அவன் தமிழ் சினிமாவிலே மாட்டிக்கிட்டு அவஸ்தைப் படறான்... அதிலேருந்து எப்படியாவது வெளியே வரணும்னு துடிக்கிறான்.